25.11.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பூண்டி ஏரியில் 20,400 கன அடி தண்ணீர் வெளியேற்றம்

கடந்த பத்து நாட்களாக பெய்து வரும் கனமழையால் பூண்டி நீர்த்தேக்கம் அதன் அதிகபட்ச கொள்ளளவான 35 அடியில் தற்போது 33.90 அடி வரை நீர் மட்டம் உள்ளது. சென்னை பூண்டி ஏரிக்கு செவ்வாய்க்கிழமை நிலவரப்படி விநாடிக்கு 10,711கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து காலை நிலவரப்படி 6 ஷட்டர்கள் மூலமாக 10,000 கனஅடி நீர் கொசஸ்தலை ஆற்றில் வெளியேற்றப்பட்டது. அதையடுத்து மாலையில் நீர் வரத்து அதிகரித்ததால் ஏரியிலிருந்து 20,400 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. கொசஸ்தலை ஆற்றில் திறக்கப்பட்ட நீர் அதிக அளவு தண்ணீர் வெளியேற்றப்படுவதால் ஒதப்பை, மோவூர், மயிலாப்பூர், தேவந்தவாக்கம், காரனோடை, மீஞ்சூர், எண்ணூர் பகுதிகளில் கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை: பலத்த மழைக்கு வாய்ப்பு

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் மீண்டும் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருக்கிறது. இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 27, 28 தேதிகளில் பலத்த மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு நோக்கி நகர்ந்து, குமரி கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் நிலைகொண்டது. பின்னர், அங்கிருந்து நகர்ந்து நேற்று முன்தினம் மாலத்தீவு மற்றும் அதனை ஒட்டியுள்ள லட்சத்தீவு

கடல் பகுதியில் நிலைகொண்டிருந்தது. இதன் காரணமாக, தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. இந்த நிலையில், சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு நேற்று பேட்டியளித்தார். அவர் கூறியதாவது:

தற்போது இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடல் பகுதியில் மீண்டும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருக்கிறது. இந்த தாழ்வுநிலை, காற்றழுத்த தாழ்வுபகுதியாக வலுவடைய வாய்ப்பு இல்லை. இது வடமேற்கு நோக்கி நகர்ந்து அரபிக்கடல் பகுதியை நோக்கி செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த புதிய காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். மேலும் 27, 28 ஆகிய தேதிகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பலத்த மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றார்.

## <u>தக்காளி, வெங்காயம் வரத்து அதிகரிப்பு</u>



சென்னை கோயம்பேடு சந்தைக்கு இரு வாரங்களுக்குப் பிறகு, தக்காளி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட பெரும்பாலான காய்கறிகளின் வரத்து செவ்வாய்க்கிழமை அதிகரித்துள்ளது. கோயம்பேடு சந்தைக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து தினமும் 270 டன் காய்கறிகள் விற்பனைக்காகக் கொண்டுவரப்படும். நவம்பர் 10-ஆம் தேதி முதல் பலத்த மழை பெய்து வருவதால் இடைப்பட்ட நாள்களில் 150 டன்னுக்கும் குறைவான காய்கறிகளே விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. இதனால்

அவற்றின் விலை இரு மடங்கு அதிகரித்தது. குறிப்பாக, சில்லறை விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.110-க்கும் பெரிய வெங்காயம் ரூ.85-க்கும் விற்கப்பட்டன. இந்த நிலையில், காய்கறி சாகுபடி அதிகரித்த தாலும், அறுவடை செய்து வாகனங்களில் ஏற்றுவதற்கான சூழல் ஏற்பட்டதாலும் கோயம்பேடு சந்தைக்கு செவ்வாய்க்கிழமை 250 காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. குறிப்பாக, கடந்த வாரம் 35 டன்னாக இருந்த தக்காளியின் வரத்து தற்போது 70 டன்னாக அதிகரித்துள்ளது. தக்காளி, வெங்காயத்தின் விலை ரூ.10 வரையில் குறைந்தது: எனவே, கடந்த வாரம் ரூ.900-க்கு விற்கப்பட்ட ஒரு பெட்டி (15 கிலோ) தக்காளி ரூ.600-ஆகக் குறைந்துள்ளது. சில்லறை விலையில் தக்காளியின் விலை ரூ.80-இல் இருந்து ரூ.70-ஆகக் குறைந்துள்ளது. தக்காளியின் வரத்து தொடர்ந்து அதிகரித்தால், விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாக மொத்த வியாபாரி சௌந்தரராஜன் தெரிவித்தார். இதேபோல், பெரிய வெங்காயம் கடந்த வாரத்தைக் காட்டிலும் 20 டன் அதிகமாகக் கொண்டு வரப்பட்டது. இதனால் அதன் விலை ரூ.50-இல் இருந்து ரூ.40-ஆகக் குறைந்துள்ளது. முருங்கைக்காய் கிலோ ரூ.130: பிற காய்கறிகளின் விலை அதிகரித்திருந்தாலும் மும்பையிலிருந்து கொண்டுவரப்படும் முருங்கைக்காய் வரத்து 25 டன்னிலிருந்து 15 டன்னாக குறைந்துள்ளது. எனவே, மொத்த விலையில் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.100-க்கும், சில்லறை விலையில் ரூ.130-க்கும் விற்கப்படுகிறது.

**<u>"உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்'</u>**

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி:

உழவர் பாதுகாப்பு அட்டை உள்ள அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களும் முதல்வரின் உழவர் பாதுகாப்புத்

திட்டத்தில் பயன்பெறலாம். இத் திட்டத்தில் கல்வி, திருமணம், இயற்கை மரணம் மற்றும் விபத்து நிவாரணம், தாற்காலிக உடல்நிலை பாதிப்பு ஆகியவற்றுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியரை அணுகலாம் என்றார்.

## கால்நடைகளுக்கு நோய் தடுப்பு நடவடிக்கை

ராஜபாளையத்தில் கால்நடைகளுக்கு வனத்துறை சார்பில் நோய் தடுப்பு நடவடிக்கை திங்கள்கிழமை மேற்கொள்ளப்பட்டது. ராஜபாளையம் பகுதியில் உள்ள ஆடுகள், மாடுகள் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் மேய்ச்சலுக்குச் செல்வது வழக்கம். இதனால், வனப்பகுதியில் உள்ள விலங்குகளுக்கு தொற்றுநோய் ஏற்படுவதைத் தடுக்க வனத்துறை சார்பில் நகரில் உள்ள கால்நடைகளுக்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடந்த முகாமுக்கு வனச்சரக அலுவலர் பாலசுப்பிரமணியம் தலைமையில் கால்நடை மருத்துவர் ஜெயராஜ் தலைமையில் சுமார் 400 ஆடு, மாடுகளுக்கு தடுப்பூசி போட்டு மருந்து மாத்திரைகளை வழங்கினார்.

## தொடர் மழை: நிரம்பும் நிலையில் ஆழியாறு அணை

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஆழியாறு அணை அதன் முழுக் கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளது. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் ஆழியாறு அணை முக்கிய அணையாக உள்ளது. 120 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழை காரணமாக இதன் நீர்மட்டம் சீராக உயர்ந்து வந்தது. இந்நிலையில், செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி ஆழியாறு அணை நீர்மட்டம் 116.20 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 895 கனஅடி நீர் வரத்து இருந்தது.

அணையில் இருந்து 165 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. ஆழியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் திங்கள்கிழமை முதல் செவ்வாய்க் கிழமை வரை 69.6 மி.மீ. மழை பெய்துள்ளது. இதே மழை தொடர்ந்து நீடித்தால் ஓரிரு நாள்களில் அணை நிரம்ப வாய்ப்புள்ளதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பிஏபி அணைகளின் நீர்மட்டம் (செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி): 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் 92.48 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு நீர்வரத்து 322.57 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து 763.19 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் 72 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 787 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து 568 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. 60 அடி கொள்ளளவு கொண்ட திருமூர்த்தி அணையின் நீர்மட்டம் 51.12 அடியாக இருந்தது.

மழை அளவு(மி.மீ.): மேல்நீராறு (5), கீழ்நீராறு (8), வேட்டைக்காரன்புதூர் (9), தூணக்கடவு (3), பெருவாரிப்பள்ளம் (5), அப்பர் ஆழியாறு (5), காடம்பாறை (2), சுல்தான்பேட்டை (17), பொங்கலூர் (8), நல்லூர் (53).

## <u>பல்லடம் பகுதியில் விதைப்புப் பணி தீவிரம்</u>

பல்லடம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை பெய்து வருவதால் விதைப்புப் பணி தீவிரமடைந்துள்ளது. பல்லடம் சுற்று வட்டாரப் பகுதியில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தோட்டப் பயிர் சாகுபடி செய்து வந்த விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சி காரணமாக எவ்விதமான நடவும் மேற்கொள்ளாமல் நிலத்தை தரிசாக போட்டு வைத்திருந்தனர். பி.ஏ.பி. வாய்க்கால் பாசன வசதி பெறும் விவசாயிகள் மட்டும் பயிர் சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில், தற்போது பெய்துள்ள மழையால்

விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீண்ட நாள்களாக எவ்வித நடவுப் பணியும் மேற்கொள்ளாமல் தரிசாகக் கிடந்த நிலத்தை சாகுபடிக்கு தயார்படுத்தி வருகின்றனர். தற்போதைய மழையைக் கொண்டு என்ன வகையான பயிர் சாகுபடி செய்யலாம் அதற்கான மண் பரிசோதனை, நீர் மற்றும் உர நிர்வாகம், மருந்து தெளித்தல், பூச்சி தாக்குதலில் இருந்து காப்பாற்றுதல் போன்றவற்றுக்காக பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை வேளாண்மை அலுவலகத்தில் அதிகாரிகளை அணுகி விவசாயிகள் ஆலோசனை பெற்று விதைப்புப் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## <u>லாடபுரம் மயிலூற்று அருவிக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால், லாடபுரம் மயிலூற்று அருவிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இங்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, இதை சுற்றுலாத் தலமாக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். பெரம்பலுர் மாவட்டத்தின் மேற்கு எல்லையாக விளங்கும் பச்சைமலை அடிவாரத்தில் உள்ளது லாடபுரம். இங்குள்ள மயிலூற்று அருவிக்கு குளிக்கவும், பச்சமலை தொடரின் அழகையும் கண்டு ரசிக்கவும் ஏராளமான மக்கள் வருகை தருகின்றனர். பெரம்பலூர் மட்டுமன்றி திருச்சி, நாமக்கல், துறையூர், முசிறி, குளித்தலை, சேலம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். தற்போது நீர்வரத்து அதிகரித்திருப்பதாலும், சீசன் தொடங்கியுள்ளதாலும் சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியுள்ளனர். சுற்றுலாத் தலமாக்க வலியுறுத்தல்: இந்நிலையில், லாடபுரம் மயிலூற்று அருவி, மலை அடிவாரத்தில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ளதால், அங்கு சில சமூக விரோத செயல்களும் நிகழ்ந்து வருகிறது. இதனால், அப்பகுதிக்கு செல்ல சுற்றுலாப் பயணிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இங்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என பொதுமக்கள்

கோரிக்கை விடுத்து வரும் நிலையில், மாவட்ட நிர்வாகம் மயிலூற்று அருவி சுற்றுலாத் தலமாக்கப்படும் என அறிவித்தது. இதைத்தொடர்ந்து, கடந்த 2009ஆம் ஆண்டு மயிலூற்று அருவியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட அப்போதைய மாவட்ட ஆட்சியர் எம். விஜயக்குமார், மலை அடிவாரத்திலிருந்து படிக்கட்டுகள், அருவி நீர் கொட்டும் பகுதியில் குளிப்பதற்கான தலம், உடைமாற்றிக் கொள்ளும் அறை, சிறுவர் பூங்கா சுற்றுலா பயணிகள் தங்குவதற்கான இடம் ஆகியவற்றின் வரைபடத்துடன் கூடிய கருத்துருவை வனத் துறையினர், சுற்றுலா துறையினருக்கு அனுப்பிவைத்தார். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், மயிலூற்று அருவியும், அங்கு செல்லும் வழியும் பராமரிப்பு இன்றி காணப்படுகிறது. எனவே, மயிலூற்று அருவியை மேம்படுத்த மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுத்து, சீசன் காலங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.

## <u>நவ.27ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நவம்பர் 27ஆம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து, ஆட்சியர் எம்.லட்சுமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் நவம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் நவ.27ஆம் காலை ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள விவசாயிகளும், சங்கப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டு, தங்களது குறைகள் குறித்த மனுக்களை அளித்து, பயனடைய வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விழுப்புரம் மாவட்டத்தில் 19 மி.மீ. மழை

விழுப்புரம் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரை சராசரியாக 19 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதில், திங்கள்கிழமை மாலை தொடங்கி செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்): செஞ்சி 25, திருக்கோவிலூர் 6, திண்டிவனம் 23, விழுப்புரம் 32, உளுந்தூர்பேட்டை 4, வானூர் 19, சங்கராபுரம் 24, கள்ளக்குறிச்சி 1, மரக்காணம் 35 என பதிவானது. இதன் மூலம், மாவட்டத்தில் மொத்தம் 168 மில்லி மீட்டரும், சராசரியாக 19 மில்லி மீட்டரும் மழையளவு பதிவாகியிருந்தது.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

### மண்ணை பொன்னாக்கும் மலைவேம்பு மரங்கள்



அது... விவசாயிகள் நிறைந்த பூமி. பத்து அடி ஆழத்தில் சுண்ணாம்பு பாறைகள் நிறைந்த கரிசல்காடு. கடல் நீர் போல் உப்புச்சுவை மிகுந்த தண்ணீர். சுட்டெரிக்கும் வெயில். வறட்சியால் பாளம் பாளமாக பிளந்துள்ள நிலம். முயல், எலி, கீரி, மயில்கள் வயலில் ஆட்டமாடி கொஞ்சமாக விளையும் சிறிய தானியங்களையும் ஒன்று விடாமல் கொற்றி தின்று விடுகின்றன. இவைகளை கட்டுப்படுத்த முடியாமல், விவசாயிகள் பலருக்கு நிலத்தை பார்த்து கண்ணீர் சிந்துவதை தவிர

வேறு வழியில்லை. வறண்ட பூமியை வளமான பூமியாக மாற்றுவது குறித்து மூளையை கசக்கிய முன்னோடி விவசாயிகள் வெ.சுப்பாராஜ் (முன்னாள் வேளாண் உதவி இயக்குனர்), அவரது மைத்துனர் நாராயணசாமி. இவர்களுக்கு விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உப்பத்தூர் கிராமத்தில், 18 ஏக்கர் கரிசல்காடு உள்ளது. பாரம்பரிய விவசாயத்தில் இருந்து சற்று விலகி லாபம் தரும் மலைவேம்பு, தீக்குச்சி மரங்கள், சவுக்கு, தென்னையை வளர்க்கின்றனர். ஊடுபயிராக மிளகாய், ராகி, ஒட்டுக்கம்பு, மக்காச்சோளம் விளைவிக்கின்றனர். சுப்பாராஜ், நாராயணசாமி கூறியதாவது: மலைவேம்பு குறுகிய காலத்தில் மற்ற மரங்களை விட, அதிக வருமானம் தரக்கூடியது. குறைந்த அளவு நீர்வளம் உள்ள பகுதிகளிலும் நன்றாக வரும். பராமரிப்பு குறைவு. நடவு செய்த மூன்று ஆண்டில் கூழ் மரமாக காகித ஆலைக்கும், நான்காம் ஆண்டில் பிளைவுட் தயாரிக்கவும், ஏழாண்டு மரங்களில் மரப்பொருட்கள் செய்யலாம். வியாபாரிகள் தேடி வருவர். தீக்குச்சி மரங்களை தீப்பெட்டி தொழிற்சாலைக்கு விற்கலாம். இவை பலன் தர பல ஆண்டுகள் தேவை. எனவே சொட்டுநீர் பாசன முறையில் ஊடுபயிர் விவசாயத்தில் கவனம் செலுத்துகிறோம். இதன் மூலம் மாத வருமானத்திற்கு குறைவில்லை என்றனர். தொடர்புக்கு 94431 33018. **கா.சுப்பிரமணியன், மதுரை.**

## <u>பாசனக் கருவிகளுக்கு அரசின் மானியம்</u>



உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு அரசு நீர்ப்பாசன மேலாண்மைக்காக நல்ல திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. “தமிழ்நாடு நீர்வள,

நிலவளத் திட்டம்” என்ற அருமையான திட்டத்தை வேளாண் பொறியியல் துறை செயல்படுத்துகிறது. ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக 4 ஹெக்டேர் (10 ஏக்கர்) வரை விவசாயிகளுக்கு மானியம் வழங்குகிறது. சொட்டுநீர்/தெளிப்பு நீர் பாசன முறைகளை ஏற்படுத்த, டிராக்டர் போன்ற கருவிகள் வாங்க, சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார்கள் வாங்க கடனும், மானியமும் வழங்கப்படுகிறது. மத்திய அரசின் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நபார்டு போன்ற விவசாய வங்கிகள் என பல துறைகளும் விவசாயக் கடன், கால்நடை வளர்க்க, ஒருங்கிணைந்த பண்ணைகள் தொடங்க கடனுதவி, மானியம் வழங்குகின்றன. விவசாயிகள் தங்களுக்கு மத்திய, மாநில அரசுகள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள், வேளாண் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை போன்ற நிறுவனங்கள் கொடுக்கும் பயிற்சிகள், மானியம், சலுகைகள், கடனுதவிகள், ஆலோசனைகளை அறிந்து முன்னேறலாம். வனத்துறை, வன விரிவாக்கத்துறை மூலம் வழங்கப்படும் மரக்கன்றுகள் பெற்று வளர்த்து வளம் பெறலாம். **எம்.ஞானசேகர்,விவசாய ஆலோசகர், 93807 55629.**

## <u>சீரகமும் சிறப்பும்</u>



சீரகம் ஓர் ஒப்பற்ற நறுமணப் பண்டமாகும். கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், பெருஞ்சீரகம் என்று பல்வேறு ரகங்கள் இதனில் உள்ளன. இவை தவிர, பிளப்புச் சீரகம் என்ற ஒரு ரகமும் உள்ளது என்கின்றனர். ஆயினும், போஜனத்திற்குரிய ரகம் சாதாரண சீரக விதைகளே ஆகும். இது

அன்றாட சமையலறைப் பயன்பாட்டில் இன்றியமையாத சாதனமாகும். சமையலாகும் காய்கறிகளுக்கும், ரசத்திற்கும் சீரகம் இடவில்லை என்றால், நறுமணமும், நற்சுவையும் அமைவதில்லை. ஆதலால் இது போஜனகுடாரி என்று பாராட்டுப் பெற்றுள்ளது. இது ஓராண்டுப் பயிராகும். ஏறத்தாழ ஒன்றரை அடி உயரம் வரை சீராக வளரக்கூடியது. அடர்ந்த கிளைகளுடனும், சிறிய இளமஞ்சள் நிற பூக்களுடனும் இது திகழ்கிறது. குஜராத்தின் ஊஞ்சா ரகத்தை அடுத்து, பாட்டான் ரகச் சீரகமும் ஆங்காங்கு நல்வரவு பெற்றுள்ளது. தமிழகத்தில், திண்டுக்கல் மாவட்டம் முதலான சிற்சில பகுதிகளில் மட்டுமே சீரக விவசாயம் ஓரளவு இயங்கி வருகிறது. இதன் விளைச்சல் மிகக்குறைவாக இருப்பதாலேயே, வட இந்தியச் சீரக ரகங்கள் தமிழ்நாட்டில் அணிவகுக்கின்றன. பித்த நோய்களுக்கெல்லாம் முதன்மையான மருந்தாகச் சீரகம் போற்றப்படுகிறது. சீரக பில்வாதி லேகியம் சீரகத் தைலம், சீரகச் சூரணம் ஆகிய நாட்டு மருந்துகள் பல்வேறு பிணிகளைத் தீர்க்கின்றன. சீரக எண்ணெய் தோல் வியாதிகள், இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி ஆகியவற்றைக் குணப்படுத்துகிறது. இது நெஞ்சுப் புண்ணை ஆற்றும். மண்டைக் குத்தலை மாய்க்கும். வாந்தி, சுவையின்மை, குன்மம், வாய்நோய், ஈரல் நோய், இரைப்பு, இருமல், கல்லடைப்பு, தொண்டைக் கம்மல், தும்மல், அஜீரணம், வாயு, நாசி நோய் ஆகிய நோய்களை சீரகம் குணமாக்கும் என்று சித்த மருத்துவ நூல் சித்தரிக்கின்றது. மேலும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும் என்கிறது அது. மிகவும் எளிதான வைத்திய வழி முறைகள் பலவும் உள்ளன. குடிதண்ணீரில் சீரகம் இட்டு அந்த நீரை அருந்தினால் உடல் காங்கை குறைந்து விடும். சீரக ரசம் ஊற்றிச் சாதம் சாப்பிடுவது மிகச்சிறந்தது. சாதம் வடித்த கஞ்சியில் சீரகத்தூள் + நெய்= கலவையைப் பருக இடுப்பு வலி இராது. வயிற்றில் வலியும் வாய்வு தொல்லையும் ஏற்பட்டால் வெந்நீரில் சீரகத்துளை இட்டுப் பருகலாம். உடம்பைச் சுத்திகரிக்கும் சக்தி இந்த நீருக்கு உள்ளது.

கேரள மாநிலத்தில் உள்ள உணவகங்களில் ஜீரா வெள்ளம் என்ற பெயரிலே சூடான சீரகத் தண்ணீர் உணவருந்துவோருக்கு வழங்கப்படுகிறது. இந்த நடைமுறை தமிழக உணவகங்களிலும் ஏற்பட்டால் நலமாக இராதோ? **எஸ்.நாகரத்தினம், விருதுநகர்.**

**<u>கோழி எரு சும்மா தந்தாலும் வேண்டாம்! மண்கெடும் களை வரும்!!</u>**



தற்போது பயிர் சாகுபடிக்கு தயாராக உள்ள நிலங்களில் பலரும் மலிவாகக் கிடைப்பதால் டன் கணக்கில் கோழி எரு ரூ.2000 முதல் 4000 வரை செலவு செய்து கொண்டு வந்து சங்கடத்தை தமக்கு தாமே உருவாக்கி வருவது அறியாமையே. இதனால் விவசாயிகள் தலையில் இடி போல களையெடுப்பு கூலி அதிகரித்தும் ஆரம்ப கால போட்டிகளால் பயிர்கள் தன் முழு உற்பத்தி திறனை வெளிக்கொணர முடியாது. நோஞ்சான் செடிகளாக வளரவும் வாய்ப்புள்ளது. அது மட்டுமா? கோழிப்பண்ணை கழிவில் தான் கன்னாபின்னா என ஹார்மோன் மற்றும் கலப்பட விதைகளை தீவனம் தயாரித்திட பயன்படுத்திய புல் விதைகள் ஏராளம் உள்ளதைக் காணலாம். இதில் பண்ணையாளர்கள் காசு ஆசையில் அருகில் உள்ள புழுதி, மண் எல்லாத்தையும் கலந்து காசாக்குவதும் உண்டு. கோழி எருவை நேரடியாக எந்தத் தோட்டத்திலும் போட்டு பயிர் சாகுபடி செய்திட எந்த பரிந்துரையும் வேளாண் விஞ்ஞானிகள் செய்யாத நிலையில் மட்காத கோழி எருவில் உள்ள காட்டமான யூரிக் அமிலம் நேரடியாக நிலத்தில் பட்டால் மண்ணில் கிருமிகள் அழியும் அபாயமும் உள்ளது என்று அறியாமல் அதிக அளவில் நாம் இடுவதால் அருகில் உள்ள தாவரங்கள் சூட்டில் வெந்து போவதும் உண்டு. மேலும் பறவைகள் அரைகுறையாக சாப்பிட்டு செரிமானமாகாத விதைகள் குறிப்பாக குதிரைவாலி முதலியன நேரடி விதைப்பு போல பரவுவதால் (பல்கிப் பெருகிடும் போது) வரவு நிச்சயம் குறைவு. இதே நிலை தான் அரைகுறையாக மட்காத தொழுஉரம் இடுவதும் இதர

பண்ணைகளில் இருந்து சாண எரு வாங்கி நேரடியாக இடுவதனால் நிகழும். விவசாயிகள் மட்க வைத்து குறிப்பிட்ட காலம் விட்டு அவற்றை உருமாற்றம் உயிரியல் சிதைவு செய்து பயன்படுத்தும் போது தான் அதன் சத்துக்கள் பயிருக்கு கிடைக்கும். களைக்கு மட்டுமல்ல, இக்கோழி எருவால் கார அமிலநிலை பாதிக்கும் போது பயிர்களும் சேதம் நேரும். உரஉபயோகத்திறனும் பாதிப்படைகிறது. நன்மை செய்யும் உயிர்கள் பெருகாது போகும். போதிய உரச்சத்து உள்ள மண்ணில் மெதுவாக கிருமிகள் கோழி எருவை மட்க வைக்க நாட்கள் பல எடுத்துக் கொள்வதால் தற்காலிக பற்றாக்குறையும் ஏற்பட்டு பயிர்களின் ஆரம்ப கால வளர்ச்சியும் பாதிப்படை வதால் நிச்சயம் மட்க வைக்காத எதையும் மண்ணில் பரப்பி ஏதோ பெரிய காரியம் செய்ததாக நினைத்து இரசாயன உரங்கள் இட வேண்டாம். அதனால் பயன் குறைவு. ஆனால் களைகள் பெருகும் பேராபத்து உள்ளதால் நன்கு ஆய்வு செய்து முடிவெடுங்கள்.

**டாக்டர். பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், உடுமலை, திருப்பூர்.**

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100.31 மி.மீ., மழை பதிவு

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று காலை நிலவரப்படி, அதிகபட்சமாக, தாம்பரத்தில் 172 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நேற்று, காலை 8:00 மணி வரையிலான மழையளவு (மி.மீ.,)

தாம்பரம் 172

கேளம்பாக்கம் 130

காஞ்சிபுரம் 126

மாமல்லபுரம் 115.80

திருக்கழுக்குன்றம் 114.80

செங்கல்பட்டு 108.90

செய்யூர் 71.0

உத்திரமேரூர் 60.0

ஸ்ரீபெரும்புதூர் 56.40

மதுராந்தகம் 48.10

மொத்தம் 1003.70

சராசரி 100.37

**<u>பூந்தமல்லியில் 126 மி.மீ., மழை</u>**

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில், அதிகபட்சமாக பூந்தமல்லியில், 126 மி.மீ., மழையும், குறைபட்சமாக கும்மிடிப்பூண்டியில், 4 மி.மீ., மழையும் பதிவாகி உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த 24 மணி நேரத்தில், 719 மி.மீ., மழை பதிவாகியது. (நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி)

மழையளவு விவரம்: (மி.மீட்டரில்)

பூந்தமல்லி 126

செம்பரம்பாக்கம் 109

திருவாலங்காடு 66

திருத்தணி 61

அம்பத்துார் 60

பூண்டி 53

திருவள்ளூர் 51

ஆர்.கே.பேட்டை 40

ஊத்துக்கோட்டை 39

பள்ளிப்பட்டு 30

தாமரைப்பாக்கம் 28

பொன்னேரி 20

செங்குன்றம் 17

சோழவரம் 15

கும்மிடிப்பூண்டி 4

**செம்மறி ஆடுகளை பாதுகாக்க நோய் தடுப்பூசி போட யோசனை**

டி.என்.பாளையம்: டி.என்.பாளையம் ஒன்றியம், வாணிப்புத்தூர் பேரூராட்சியில் நூற்றுக்கணக்கான செம்மறி, வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. இப்போது மழை, பனிக்காலம் என்பதால், செம்மறி ஆடுகள் நீலநாக்கு, துள்ளுமாரி நோய் தாக்குதலுக்கு உள்ளாகும். இதனால், கால்நடை பராமரிப்புத்துறையினர், டிசம்பர் மாதத்தில் நோய் தடுப்பு மருந்து வழங்குகின்றனர். நோய் தாக்குதலுக்கு முன்பாகவே அதாவது இவ்வார இறுதியிலேயே, முகாம் அமைத்து தடுப்பூசி போட்டால், ஆடுகள் நோயால் பாதிக்கப்படுவது முற்றிலும் தவிர்க்கப்படும் என்று, குண்டேரிப்பள்ளம் விவசாயிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

**சாத்தனூர் அணையில் உபரி நீர் வெளியேற்றம்**

திருவண்ணாமலை: சாத்தனூர் அணை, 116.5 அடியை எட்டியதால், பாதுகாப்பு கருதி, அணையில் இருந்து வினாடிக்கு, 500 கன அடி நீர்

வெளியேற்றப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த, பத்து நாட்களுக்கும் மேலாக பெய்து வரும் தொடர் மழையால், தென் பெண்ணை ஆற்றில், மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கிருஷ்ணகிரி மாவட்டம் கே.ஆர்.பி., அணை நிரம்பி, அங்கிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் தென்பெண்ணையாற்றில் வருவதால், சாத்தனூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால் சாத்தனூர் அணை, மொத்த கொள்ளளவான, 119 அடியில், நேற்று காலை, 116.5 அடியை எட்டியது. அணைக்கு, 3,056 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் பாதுகாப்பு கருதி, வினாடிக்கு, 500 கன அடி தண்ணீர், தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. நேற்று அணை மதகுகளை கலெக்டர் ஞானசேகரன் திறந்து வைத்தார். தென்பெண்ணை ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், மாவட்டத்திற்கு ஏற்கனவே வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென் பெண்ணையாற்றின் கரையோரம் வசிக்கும் பொதுமக்கள், பாதுகாப்பான இடத்திற்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆற்றின் அருகே யாரும் செல்ல வேண்டாம். ஆற்றை கடக்கவும் வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

## <u>வெலிங்டன் ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

திட்டக்குடி:தொழுதுார் அணைக்கட்டிலிருந்து வெள்ளாறு மற்றும் வெலிங்டன் ஏரிக்கு நீர்வரத்து துவங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். திட்டக்குடி பகுதி விவசாயிகள், பாசன வசதிக்காக வெலிங்டன் ஏரியையும், நிலத்தடி நீர்மட்டத்திற்காக வெள்ளாற்று நீர்வரத்தையும் நம்பியுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக வெள்ளாற்றில் நீர்வரத்து இல்லாததால், கரையோர கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. இந்நிலையில், தற்போது சேலம், பெரம்பலுார்

மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக, தொழுதூர் அணைக்கட்டிற்கு வந்த தண்ணீர் நேற்று முன்தினம் காலை வெள்ளாற்றுக்கு 560 கன அடி நீரும், வெலிங்டனுக்கு 1,860 கன அடி நீரும் திறந்து விடப்பட்டது. நேற்று காலை, வெலிங்டனுக்கு 1,260 கன அடி நீர் திறந்து விடப்பட்டது. மதியம் 1:00 மணி நிலவரப்படி, வெலிங்டன் ஏரியின் முழு கொள்ளளவான 2,560 மில்லியன் கன அடியில் 650 மில்லியன் கன அடியாகவும், 32 அடி நீர்மட்டத்தில் 17 அடியாகவும் உயர்ந்தது. நீர்மட்டம் உயர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மணிமுக்தா அணையில் "ஷட்டர்கள்' பராமரிப்பு

கள்ளக்குறிச்சி:சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையில், ஷட்டர்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டத்தில் பெய்து வரும் வடக்கிழக்கு பருவ மழையால் அணைகள், ஏரிகள் போன்ற நீர் நிலைகள் நிரம்பி வருகிறது. கள்ளக்குறிச்சி அடுத்த சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையின் மொத்த கொள்ளளவான 36 அடியில் 34 அடிக்கு நீர் மட்டம் உயர்ந்தன. தொடர்ந்து அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததால், அணையிலிருந்து ஷட்டர்கள் மூலம் ஆறு வழியாக 2,000 கன அடி முதல் 6,000 கன அடி வரை வரத்து நீர், படிப்படியாக வெளியேற்றப்பட்டன. தற்போது அணையில் முழு கொள்ளவையும் எட்டியுள்ளது. இதனால் அணையின் மூன்று ஷட்டர்கள், 2 பாசன கால்வாய் ஷட்டர்கள் ஆகியவை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டன. திருச்சியைச் சேர்ந்த தனியார் நிறுவன ஊழியர்கள் பராமரிப்பு பணியை மேற்கொண்டனர். ஷட்டர்களின் செயின், கீர் வீல் போன்றவற்றை முழுமையாக பரிசோதனை செய்தனர். நேற்று முன்தினம் இரவு, பாசன கால்வாயிலும், ஆறு வழியாக திறக்கப்படும் மூன்று மெயின் ஷட்டர்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டனர்.

## கை கொடுக்கும் பண்ணை குட்டைகள்: 50 சதவீதம் பருவ மழையால் நிரம்பியது

கரூர்: தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், வெட்டப்பட்ட பண்ணை குட்டைகள், பருவ மழையால் சராசரியாக, 50 சதவீதம் வரை, தண்ணீர் நிரம்பிள்ளது. பருவமழை ஏமாற்றம், விதைகள், உரத்தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு, விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை, இளைய தலைமுறையினரின் மாற்று தொழில் ஆர்வத்தால் விவசாயம் மெல்ல நலிவடைந்து வருகிறது. வேளாண்துறையை காக்க, மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இருப்பினும், கூலியாள் பற்றாக்குறை பிரச்னையாக இருந்து வருகிறது. இதையடுத்து, விவசாய நிலங்களுக்கு தேசிய ஊரக வேலை திட்டத்தில் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, பருவமழை காலங்களில் பெய்யும் மழைநீரை சேமிக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் விவசாய நிலங்களில் பண்ணை குட்டைகளை அதிகளவில் அமைக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தின்படி, கரூர் மாவட்டத்தில், பண்ணை குட்டைகள் வெட்டும் பணி விறுவிறுப்பாக நடந்தது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் உள்ள, எட்டு வட்டாரங்களில், 329 இடங்களில் பண்ணை குட்டைகள் ஏற்படுத்தப்பட்டன. நடப்பாண்டில், 288 அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இதுவரைக்கு கரூர், 8, தாந்தோணி, 6, அரவக்குறிச்சி, 16, க.பரமத்தில், 3, குளித்தலை, 11, கிருஷ்ணராயபுரம், 14, கடவூர், 46, தோகைமலை, 11, என மொத்தம், 115 இடங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது பருவமழை பெய்து வரும் நிலையில், இரண்டு ஆண்டுகளில் வெட்டப்பட்ட, 444 பண்ணை குட்டைகளில் சராசரியாக, 50 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் கவிதா கூறியதாவது: ஒரு குட்டை, 15 மீட்டர் அகலம், 15 மீட்டர் நீளம், 1.5

மீட்டர் ஆழம் கொண்டவையாக அமைக்கப்பட்டு வருகிறது. நிலத்தின் அளவை பொறுத்து குட்டைகளின் அளவும் வேறுபடுகிறது. பெரும்பாலும் குட்டைகள், போர்வெல் அல்லது கிணற்றுக்கு அருகில் அமைக்கப்படுகிறது. இதனால், மழை காலத்தில் குட்டைகளில் தண்ணீர் தேங்குவதன் மூலம், நிலத்தடி நீர் மட்டம் உயரும். அதோடு வறட்சி காலத்தில் நீரை தேக்கி வைத்து பாசனம் செய்யவும் உதவியாக இருக்கும் என்ற நோக்கில் குட்டைகள் வெட்டப்பட்டன. இந்த முயற்சிக்கு பலன் தற்போது கிடைக்க துவங்கி உள்ளது. குறிப்பாக குளித்தலை, கிருஷ்ணராயபுரம், தாந்தோணி ஆகிய ஆற்று பகுதிகளில் உள்ள பண்ணை குட்டைகள், 60 முதல், 100 சதவீதம் வரை நிரம்பி உள்ளது. மற்ற பகுதிகளில் உள்ள குட்டைகள், 30 முதல், 50 சதவீதம் வரை நிரம்பி உள்ளது. சராசரியாக பார்த்தால், 50 சதவீதம் நிரம்பி உள்ள நிலையில், மழை தொடர்வதால், 100 சதவீதம் தணணீர் தேங்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மழையினால் தக்காளி விலை உயர்வு: மேச்சேரி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி</u>

மேச்சேரி: தமிழகத்தில் பல மாவட்டங்களில் நீடிக்கும் கனமழையால், நடப்பாண்டு தக்காளி விலை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது, மேச்சேரி ஒன்றிய விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. சேலம் மாவட்டம்,மேச்சேரி சுற்றுப்பகுதியில் ஆண்டுதோறும், மானாவாரியாக, 2,400 ஏக்கர், இறவையில், 600 ஏக்கர் என, மொத்தம், 3,000 ஏக்கரில் மொத்தம், 35 ஆயிரம் டன் தக்காளி உற்பத்தி செய்யப்படும். மேச்சேரி தக்காளி தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. நடப்பாண்டு, மேச்சேரி பகுதியில், நடப்பு மாதம் வரை, மானாவாரியாக, 1,000 ஏக்கர், இறவையாக, 250 ஏக்கரில் விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். ஆண்டுதோறும் மேச்சேரியில் அறுவடை உச்சத்தில்

இருக்கும் போது, தக்காளி விலை ஓரு டன், 2,000 ரூபாய் வரை விலை வீழ்ச்சியடைந்து விடும். நடப்பாண்டில், கடந்த இரு வாரமாக தமிழகத்தின் பல மாவட்டங்களில், பலத்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, சாகுபடி செய்த பயிர்கள் சேதமாகியுள்ளது. ஆனால், மேச்சேரி பகுதியில் மானாவாரி நிலங்களே அதிகம் என்பதால், இதுவரை, 5.75 ஏக்கரில் மட்டுமே தக்காளி செடிகள் சேதமாகியுள்ளது. மழையால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. இதனால், வெள்ளத்தால் பாதித்த மாவட்டங்கள் மட்டுமின்றி, பிற மாவட்டங்களுக்கும், மேச்சேரி தக்காளி விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேச்சேரி தக்காளி வியாபாரி குமார் கூறியதாவது: கடந்த ஆண்டு இதே சமயம் தக்காளி ஒரு டன், 15 ஆயிரம் ரூபாய் முதல், 20 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளிடம் கொள்முதல் செய்தோம். நடப்பாண்டு பிற மாவட்டங்களில் தக்காளி உற்பத்தி குறைந்ததால், மேச்சேரியில் தற்போது, ஒரு டன் தக்காளி, 40 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறோம். பலத்த மழை காரணமாக பிற மாவட்டங்களில் தேவை அதிகரிக்கும் என்பதால், நடப்பாண்டு மேச்சேரி தக்காளி கொள்முதல் விலை அதிகாரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>கரியக்கோவில் அணை நீர் மட்டம் உயர்வு</u>

ஆத்தூர்: கரியக்கோவில் அணை நீர் மட்டம், 48 அடி உயர்ந்ததால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே, பாப்பநாயக்கப்பட்டி கிராமத்தில் உள்ள, கரியக்கோவில் அணை, 53 அடி உயரமும், 190 மில்லியன் கன அடி நீர் தேங்கும் திறனும் உள்ளது. பருவ மழை பெய்து வருவதால், நேற்று, விநாடிக்கு, 118 மில்லியன் கன அடி நீர் அணைக்கு வருகிறது. இதனால், அணையின் நீர் மட்டம், 48.07 அடியாக உயர்ந்தது. தற்போது, 163.04 மில்லியன் கன அடி நீர் உள்ளது. 50.05 அடி உயரம் அணை நீர் மட்டம் வந்தவுடன்,

வசிஷ்ட நதியில் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். வெள்ள அபாயம் ஏற்படும் என்பதால், வருவாய்த்துறையினர், வசிஷ்ட நதி கரையோர கிராமங்களில், தண்டரோ மூலம், பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி எச்சரிக்கை விடுத்தனர்.

## <u>40 ஆண்டுகளுக்கு பின் நிரம்பிய வரலாற்று சிறப்பு வாய்ந்த குளம்</u>

சேலம்: சேலம் அருகே, வரலாற்று சிறப்பு வாய்ந்த பழமையான குளம், 40 ஆண்டுகள் கழித்து நிரம்பியுள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சேலம், கோரிமேடு அடுத்த, ஆத்துக்காடு பகுதியில், சுகவனேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில், 1,350 ஆண்டுகள் பழமை வாய்ந்த தெப்ப குளம் உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன், செட்டி முதலியார் காலத்தில், சின்னராஜா, பெரிய ராஜா ஆகியோரால் கட்டப்பட்டது. ஏற்காட்டில் இருந்து திருமணி முத்தாறுக்கு செல்லும் வழியில், வரட்டாறு என்ற கிளை ஆற்றில் இருந்து, குளத்துக்கு நீர் செல்லும் வகையில் வாய்க்கால் வசதி ஏற்படுத்தப்பட்டது. பல ஆண்டுக்கு முன், வழித்தடம் அடைக்கப்பட்டது. குளம், 30 அடி ஆழம், 50 நீளம், அகலம் உடையது. சமீபத்தில், பெய்த கன மழையால், சேலம் மாவட்டம் முழுவதும் பரவலாக ஏரி, குளங்கள், கிணறு என, பெரும்பாலான நீர் ஆதாரங்கள் நிரம்பி வருகிறது. பழமையான, ராஜா காலத்து குளம் நிரம்பி காட்சியளிக்கிறது. சேலம் வரலாற்று சங்க பொது செயலாளர் பர்னபாஸ் கூறியதாவது: மன்னர் காலத்தில் கட்டப்பட்ட இந்த குளத்தை அவர்களுக்கு பின் ஆங்கிலேயர்களும், குளிப்பதற்கு பயன்படுத்தி யுள்ளனர். கடந்த, 1973ம் ஆண்டு சேலத்தில் வெள்ளம் ஏற்பட்டபோது, இந்த குளம் நிரம்பி காட்சியளித்தது. அதன் பிறகு, சிறிதளவு தண்ணீர் மட்டுமே இருந்து வந்தது. கடந்த, 40 ஆண்டுகளுக்கு பின், தற்போது தான் இந்த குளம் முழுமையாக நிரம்பி காட்சியளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆணைவாரி முட்டல், செந்தாரப்பட்டி ஏரிகள் நிரம்பியது

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, ஆணைவாரி முட்டல் மற்றும் செந்தாரப்பட்டி ஏரிகள் நிரம்பியன. ஆத்தூர் அருகே, கல்லாநத்தம் பஞ்சாயத்து, முட்டல் கிராமத்தில், கல்வராயன் மலை அடிவாரத்தில், ஆணைவாரி முட்டல் ஏரி உள்ளது. பருவ மழை பெய்து வருவதால், கல்வராயன் மலை ஆறு, நீர் வீழ்ச்சிகளில் தண்ணீர் அதிகரித்து, ஆணைவாரி முட்டல் ஏரி நிரம்பியது. அதேபோல், 125 ஏக்கர் பரப்பிளவிலான செந்தாரப்பட்டி ஏரி நிரம்பியதால், கரை பகுதியில் இருந்த கோவில்கள் தண்ணீரில் மூழ்கி விட்டன. தண்ணீர் வரத்து அதிகம் உள்ள ஏரிகளில், கரை மற்றும் தண்ணீர் வெளியேறும் நீரோடைகளில், வருவாய், பொதுப்பணித்துறை அலுவலர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதிகளில், குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏரிகள் நிரம்பி வருவதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தென்னையில் கூடுதல் மகசூல் மண்டபம் விவசாயிகள் மகிழ்ச்சி

கீழக்கரை: மண்டபம் ஒன்றியத்திற்குட்பட்ட வா.தெற்கூர், சங்கந்தியான் வலசை, வெற்றிவேல் வலசை பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புகளில் சென்ற ஆண்டை காட்டிலும் இந்தாண்டு தேங்காய் மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பெய்த கோடை மழையால் காய்க்கக் துவங்கிய தேங்காய்கள் தற்போது விளைச்சலுக்கு வந்துள்ளன. வழக்கத்தை விட இதன் எடை, எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தாம்பூலங்களில் வைப்பதற்காக இவற்றை விரும்பி வாங்கி செல்கின்றனர். மேலும் எண்ணெய் சத்து அதிகம் என்பதால் ஈரோடு, காங்கேயம், வெள்ளக்கோயில் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் முன்பணம் செலுத்தி தேங்காய்களை வாங்கி செல்கின்றனர். இதுகுறித்து தென்னை விவசாயி பூமிநாதன் கூறுகையில்,"வருடத்திற்கு ஆறு முறை

தென்னை மரத்தில் இருந்து தேங்காய் பறிப்போம். இயற்கை உரத்தை மட்டுமே இடுகிறோம். தென்னையை தாக்கும் காண்டாமிருக வண்டு, சில் வண்டு, உள்ளிட்ட பூச்சிகளின் தாக்குதலை சமாளிக்க அவ்வப்போது மருந்துகள் தெளிக் கிறோம். வேளாண்மைத் துறையிட மிருந்து முறையான வழிகாட்டுதல்கள், மானியம் கிடைத்தால் தென்னை சாகுபடியை அதிகரிக்க விவசாயிகள் தயாராக உள்ளனர்," என்றார்.

## கோவிலான்குளத்தில் 36.80 மி.மீ., மழை

விருதுநகர்: மாவட்டத்தில் நேற்று காலை பெய்த மழையில் அதிகபட்சமாக கோவிலான்குளத்தில் 36.80 மி.மீ.,மழை பெய்துள்ளது. கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழையால் கண்மாய்கள், அணைகள் நிரம்பி வருகிறது. நேற்றுகாலை வரை மாவட்டத்தில் அருப்புக்கோட்டை13, சாத்தூர் 4, சிவகாசி13.60, விருதுநகர் 15, ராஜபாளையம் 5, காரியாபட்டி29.80, பிளவக்கல் 20, வெம்பக்கோட்டை 18.30, வத்திராயிருப்பு 23.80, கோவிலான்குளம் 36.80 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களுக்கு பிறகு நேற்று வெயில் அடித்தது. இரவு வரை மழை இல்லை. நேற்று முன் தினம் வரை பெய்த மழையில் 328 வீடுகள் சேதமடைந்துள்ளன.

அணை நீர் மட்டம் (அடியில்)

பெரியாறு - 39.6(43.4)

கோவிலாறு -32.79(40.3)

வெம்பக்கோட்டை - 14.26(23.25)

கோல்வார்பட்டி - 15.65(17.05)

ஆனைக்குட்டம் - 20.46(23.25)

குல்லூர் சந்தை - 7.59( 7.59)

இருக்கன்குடி - 9.92(21.2)

சாஸ்தா கோயில் - 10(10)

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**137 அடியை கடந்தது பெரியாறு அணை**



கூடலூர்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தொடர்வதால் பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று 137 அடியை கடந்தது. 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்றைய நிலவரப்படி, 137 அடியை கடந்தது. நீர்வரத்து வினாடிக்கு 3,143 கனஅடியாகவும், நீர் வெளியேற்றம் 511 கனஅடியாகவும் உள்ளது. அணையின் இருப்புநீர் 6,370 மி.கனஅடி.

**தமிழகத்தில் நாளை மறுநாள் முதல் கனமழைக்கு வாய்ப்பு: சனிக்கிழமை மிக கனமழை கொட்டும் என எச்சரிக்கை**

சென்னை: நாளை மறுநாள் முதல் இரண்டு நாட்களுக்கு தமிழகத்தில் மீண்டும் கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தீவிரமடைந்த வடகிழக்கு பருவமழை மற்றும் அடுத்தடுத்து உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் கடந்த 10 நாட்களுக்கு மேலாக

கனமழை கொட்டித் தீர்த்தது. குறிப்பாக, கடலூர், காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் மிக கனமழை பெய்ததால் கடும் பாதிப்புகள் ஏற்பட்டன. இந்த பாதிப்புகளில் இருந்து மக்கள் மீன தொடங்கியுள்ள நிலையில் மீண்டும் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வரும் 27 மற்றும் 28ம் தேதிகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என மத்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**29 மற்றும் 30ம் தேதிகளில் மழை மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை**

விடுக்கப்பட்டுள்ளது. அந்தமான் உள்ளிட்ட வங்கக்கடலில் நாளை புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் இயக்குனர் ரமணன் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக 27 மற்றும் 28ம் தேதிகளில் தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் கூறியுள்ளார். இதனிடையே மழை வெள்ள பாதிப்பு காரணமாக காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி தாலுகாவிற்கு உட்பட்ட பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோளம் விலை உயர்வு குவின்டால் ரூ.1,500க்கு விற்பனை**

கோவை, : மக்காச்சோளம் விலை கடந்த 2 மாதத்திற்கு பிறகு குவின்டால் ரூ.1,500ஐ தொட்டுள்ளது. கோவை, திருப்பூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நேற்று நிலவிய விளைபொருள்களின் விலை விபரம்: தேங்காய் (100 காய்க்கு) ஆனைமலையில் ரூ.750 முதல் ரூ.1,900 வரை, காரமடையில் ரூ.1,700 முதல் ரூ.1,750 வரை, பொள்ளாச்சியில் ரூ.900 முதல் ரூ.1,300 வரை, அவிநாசியில் ரூ.1,310 முதல் ரூ.1,510 வரை, உடுமலையில் ரூ.1,250 முதல் ரூ.2,200 வரை, பொங்கலூரில் ரூ.1,400 முதல் ரூ.1,600 வரை, செஞ்சேரியில் ரூ.1,400 முதல் ரூ.1,600

வரை. மக்காச்சோளம் (ஒரு குவின்டால்) காரமடையில் ரூ.1,350 முதல் ரூ.1,370 வரை, உடுமலையில் ரூ.1,450 முதல் ரூ.1,500 வரை, அன்னூரில் ரூ.1,300 முதல் ரூ.1,500 வரை. கொண்டைக்கடலை உடுமலையில் ரூ.4,800 முதல் ரூ.5,200 வரை, கம்பு காரமடையில் ரூ.1,300 முதல் ரூ.1,330 வரை, நிலக்கடலை சேவூரில் ரூ.4,500 முதல் ரூ.4,700 வரை. இதில் மக்காச்சோளம் உடுமலையில் குவின்டால் ரூ.1,500 வரை விற்றுள்ளது. கடந்த 2 மாதமாக மக்காச்சோளம் விலை பெரும்பாலான இடங்களில் ரூ.1,450ஐ தாண்டாத நிலையில் நேற்று ரூ.1,500க்கு விற்றுள்ளதால், மக்காச்சோள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இது குறித்து ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் கூறுகையில், ‘கறிக்கோழி பண்ணைகளுக்கு தேவையான மக்காச்சோளத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விலை உயர்ந்துள்ளது’ என்றனர்.

## 3 ஆண்டுக்கு பிறகு மஞ்சள் விலை குவின்டால் ரூ.10 ஆயிரத்தை தாண்டியது

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த விற்பனையில் மஞ்சள் விலை 3 ஆண்டுக்கு பிறகு குவின்டால் ரூ.10 ஆயிரத்தை தாண்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 170 குவின்டாலும், கிழங்கு ரகம் 43 குவின்டாலும் என மொத்தம் 213 குவின்டால் விற்பனையானது. செம்மேடு, ஆலாந்துறை, அன்னூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி, ஈரோடு பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.9,020 முதல் ரூ.10,724 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,900. விற்பனை மதிப்பு ரூ.16.83 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.8,797 முதல் ரூ.9,419 வரை விற்றது. இதன்

சராசரி விலை ரூ.9,100. விற்பனை மதிப்பு ரூ.3.91 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.20.74 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.2 லட்சம் லட்சம் குறைவாகும். எனினும் விரலி மஞ்சள் கடந்த வாரத்தை காட்டிலும் குவின்டாலுக்கு ரூ.ரூ.700ம், விரலி மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.800ம் அதிகரித்தது. மஞ்சள் விலை கடந்த 2 வாரமாக அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். விவசாயிகள் கூறுகையில், 'கடந்த 3 ஆண்டுகளுக்கு பிறகு மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.10 ஆயிரத்தை தாண்டியுள்ளது.' என்றனர். அதிகாரிகள் கூறுகையில், 'நேற்று ஈரோட்டில் விற்பனையான மஞ்சள் விலையை காட்டிலும் கோவையில் விலை அதிகரித்துள்ளது.' என்றனர்.

## <u>நீலகிரியில் பழுத்து குலுங்கும் சுரினாம் செரி பழங்கள்</u>

ஊட்டி, : தென் அமெரிக்காவில் உள்ள கடற்கரை பகுதிகள் மற்றும் பிரஞ்சு கயானா போன்ற பகுதிகளில் காணப்படும் மருத்துவ குணம் நிறைந்த சுரினாம் செரி பழம் தற்போது நீலகிரியில் பல இடங்களில் காய்த்துள்ளது. சுரினாம் செரி பழங்கள் சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள் நிறத்தில் காணப்படும். சிறிய குடை மிளகாய் போல் காணப்படும் இந்த பழங்கள் பிரேசிலின் செரி, கயானி செரி, செர்சியர் செரி மற்றும் பிட்டாங்கா என்று அழைக்கப்படுகிறது. இந்த வகை பழங்கள் வட கிழக்கு மாகாணங்கள் மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள கடற்கரை பகுதிகள் மற்றும் பிரஞ்சு கயானா போன்ற பகுதிகளில் அதிகளவு காணப்படுகிறது. சுரினாம் என்ற பகுதியில் இதனை கண்டறியப் பட்டதால், அதே பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த பழம் அமில சுவையை கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இந்த வகை பழங்கள் இங்கு கொண்டு வரப்பட்டள்ளது. தற்போது கல்லார் மற்றும் பர்லியார் பகுதிகளில் உள்ள தோட்டக்கலைத்துறைக்கு சொந்தமான பழப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும், இதனை

விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் நாற்று உற்பத்தியும் செய்யப்பட்டு வருகிறது. தற்போது, இந்த வகை பழங்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகிறது. குறிப்பாக, அருவங்காடு, பாய்ஸ்கம்பெனி போன்ற பகுதிகளில் ஒரு சிலர் தோட்டங்களிலும், வீடுகளுக்கு முன்புறமும் வைத்துள்ளனர். பனிக்காலங்களில் அதிகளவு காய்க்கும் இந்த பழங்கள் தற்போது ஊட்டி அருகே பாய்ஸ் கம்பெனி பகுதியில் முன்னாள் ராணுவ வீரர் ஜெரால்டு என்பவர் வீட்டில் அதிகளவு காய்த்துள்ளது. தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராம்சுந்தர் கூறுகையில், சுரினாம் செரி பழம் வட கிழக்கு மாகானங்கள் மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள கடற்கரை பகுதிகள் மற்றும் பிரஞ்சு கயானா போன்ற பகுதிகளில் காணப்படும். இது மருத்துவ குணம் நிறைந்தது. இதில், வைட்டமின் ஏ மற்றும் சி அதிகளவு உள்ளது. புளிப்பு சுவை கொண்டது. தற்போது இவ்வகை செரி பழங்களின் மகசூல் அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இதன் நாற்றுகள் உற்பத்தி செய்து நீலகிரி விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம், என்றார்.

## <u>திருச்சி மாவட்டத்தில் மழையளவு அதிகரிப்பு</u>

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் இந்த மாதம் பெய்ய வேண்டிய 117.70 மி.மீ மழைக்கு பதில் நேற்று வரை 122.87 மி.மீ மழை பெய்துள்ளது. வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் மாதம் 28ம் தேதி துவங்கியது. இந்த வருடம் சற்று தாமதமாக தொடங்கிய வடகிழக்கு பருவ மழை ஆரம்பத்தில் மந்த கதியில் இருந்தது. ஏற்கனவே தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு குறைவாகவே பெய்துள்ள நிலையில் வடகிழக்கு பருவமழையும் குறைவாகத்தான் இருக்கும் என அனைத்து தரப்பினரும் கருதினர். இந்த நிலையில் வங்க கடலில் அடுத்தடுத்து உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் மழை வெளுத்து வாங்கியது. திருச்சி மாவட்டத்தில் மழையால் பெரிய சேதம்

ஏற்படாவிட்டாலும், மழை அதிகளவில் பெய்துள்ளது. நேற்று முன்தினம் கனமழை கொட்டியது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவமழை மூலம் திருச்சி மாவட்டத்தில் இயல்பாக 356.10 மி.மீ மழை கிடைக்கும். இந்த ஆண்டு கடந்த அக்டோபர் மாதத்தில் இயல்பான மழை 173 மி.மீக்கு பதில் 151.36 மி.மீ. மழையே பெய்துள்ளது(84.49சதவீதம்). நவம்பர் மாதத்தில் திருச்சி மாவட்டத்தில் 117.70 மி.மீ. மழை பெய்ய வேண்டும். ஆனால் நேற்று வரை 122.82 மி.மீ மழை பெய்துள்ளது. 5.17 மி.மீ. அதிக மழை பெய்துள்ளது. அதாவது நேற்று நிலவரப்படி 104.39 சதவீதம் மழை பெய்துள்ளது. டிசம்பர் மாதத்தில் இயல்பாக 65.4 மி.மீ. மழை பெய்ய வேண்டும். கடந்த 2014ம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 356.10 மி.மீ வடகிழக்கு பருவ மழைக்கு பதில் 271.60 மி.மீ. மழையே பெய்தது. இந்த ஆண்டு இதுவரை 274.23 மி.மீ. மழை பெய்துள்ளது. இன்னும் இந்த மாதத்தில் ஒரு வாரமும், டிசம்பர் மாதமும் இருக்கிறது. எனவே இந்த ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் இயல்பான மழையை விட அதிக மழை கிடைக்கும் என எதிர்பார்ப்பு நிலவுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பெய்த மழை அளவு: கடந்த 10 ஆண்டுகளில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு: 2005ம் ஆண்டு 1,311.63 மி.மீ., 2006ல் 689.62, 2007ல் 751.07, 2008ல் 1,074.82, 2009ல் 653.99, 2010ல் 893.11, 2011ல் 764.23, 2012ல் 578.13, 2013ல் 518.61, 2014ல் 559.10, 2015ல் நேற்று வரை 710.22 மி.மீ மழை பெய்துள்ளது. 2015ல் மாதம் தோறும் பதிவான மழை: 2015ம் ஆண்டு மாதம் தோறும் பதிவான மழை அளவு விவரம் வருமாறு: ஜனவரி மாதம் 13.12 மி.மீ., பிப்ரவரி 1.22, மார்ச் 0.17, ஏப்ரல் 117.30, மே 107.20, ஜூன் 28.36, ஜூலை 17.33, ஆகஸ்ட் 54.82, செப்டம்பர் 96.57, அக்டோபர் 151.36, நவம்பர் 122.87 மி.மீ., என பதிவாகி உள்ளது. கோடையில் அதிகம்: குளிர்காலத்தில் 25.00 மி.மீ., பதில் 14.24 மி.மீ.,ம், கோடைகாலத்தில் 110.10 மி.மீ.,க்கு பதில் 224.67 மி.மீயும்,

தென்மேற்கு பருவமழை காலத்தில் 270.30 மி.மீ., பதில் 197.08 மி.மீ.யும் பதிவாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை காலம் என அழைக்கப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் 356.10 மி.மீ., பெய்ய வேண்டும். நேற்று வரை 274.23 மி.மீ., பதிவாகி உள்ளது. வடகிழக்கு பருவமழை இயல்பான மழை அளவை எட்ட இன்னும் 81.87 மி.மீ., தேவை. வடகிழக்கு பருவமழை முடிய இன்னும் ஒரு மாதம் இருப்பதால், இயல்பான அளவை காட்டிலும் கூடுதல் மழை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளையில் குறைந்த அளவு பெய்யக்கூடிய கோடைகாலத்தில் அதிகளவு மழை பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## <u>தேனீ வளர்ப்பு ஆய்வகம் திறப்பு</u>

நாகமலை, : நாகமலைபுதுக்கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் தேனீ வளர்ப்பு ஆராய்ச்சி ஆய்வகம் திறப்பு விழா நடந்தது. சிவகாமி ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இயக்குனர் டென்சிங் திறந்து வைத்தார். கல்லூரி தலைவர் செல்வராஜன், செயலாளர் போஸ், துணைத்தலைவர் பெரீஸ்மகேந்திரவேல், பொருளாளர் சேர்மபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒருங்கிணைப்பாளர் விலங்கியல் துறை தலைவர் மலர் கூறுகையில், தமிழகத்தின் முதன்முறையாக கல்லூரியில் தேனீ வளர்ப்பு ஆய்வகம் திறந்திருப்பது இங்கு தான் முதல்முறை. ஆய்வகம் ரூ.6 லட்சம் 60 ஆயிரம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 100 தேன் வளர்க்கும் பெட்டிகள் உள்ளன. ஒரு பெட்டியில் இருந்து 1 முதல் 2 கிலோ வரை தேன் கிடைக்கும். தேனீ வளர்ப்பதன் மூலம் விவசாயத்தில் நல்ல மகசூல் கிடைக்கும். மருத்துவத்திற்கு பயன்படும் ஜெல்லி தயாரிக்கவும் உதவுகிறதுஎன்றார். .

**<u>கருப்பு திராட்சையில் செவட்டை நோய் தாக்குதல் மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரம்</u>**

கம்பம், : தொடர் மழை காரணமாக, கம்பம் பகுதியில் கருப்பு பன்னீர் திராட்சையில் செவட்டை நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால், மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தேனி மாவட்டம், கம்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கருப்பு பன்னீர் திராட்சை அதிகளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக, இந்த கருப்பு பன்னீர் திராட்சையில் பிஞ்சுகள் மற்றும் காய்கள் உள்ள கொடிகளில் செவட்டை நோய் தாக்கி வருகிறது. இதனால், பெருமளவு மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மருந்து தெளித்து வந்தாலும் இதை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "தொடர் மழையால் காய்கள் மற்றும் பிஞ்சுகள் உள்ள கொத்துகளின் இடுக்குகளில் பஞ்சு போல் படர்ந்து செவட்டை நோய் தாக்கியுள்ளது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் பழங்கள் வரத்தும் குறையும் நிலை ஏற்பட்டு உள்ளது" என்றனர்.

**<u>மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த பயிற்சி</u>**

தேனி, : ரெட் லேடி பப்பாளியை தாக்கும், மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு, வேளாண் மாணவியர் பயிற்சி அளித்தனர். தேனி மாவட்டம், குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவியர், சின்னமனூர் அருகே உள்ள ஓடைப்பட்டியைச் சேர்ந்த விவசாயி ஈஸ்வரன் தோட்டத்திற்கு சென்று, அங்கு விளைந்துள்ள ரெட் லேடி பப்பாளி ரக மரங்களை பார்வையிட்டனர். பின்னர் பப்பாளியை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்து பயிற்சி அளித்தனர். இதில், மாணவியர் பரமேஸ்வரி, பூமாரி, கீர்த்தனா, ஆதிரா விஸ்வநாத், தேவிகாஸ்ரீ,

காவியபாலா, விஜி, மகாலட்சுமி, சண்முகப்பிரியா, ரீபாஜோசப் கலந்து கொண்டனர். மேலும், அருகில் உள்ள விவசாயிகளிடம் சென்ற மாணவியர், 'ரெட் லேடி பப்பாளி நட்ட 9 மாதத்தில் பயன் தரும். இப்பழமானது அதிக சிவப்பு நிறத்துடன் காணப்படும். இதில் வைட்டமின் ஏ, சி உள்ளது எனக் கூறினர். ரெட் லேடி பப்பாளி மரத்தை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த, வெர்ட்டிசிலியம் மற்றும் மீன் எண்ணெய் சோப்பை பயன்படுத்த முறை குறித்தும் விளக்கிக் கூறினர்.

**மாடியில் காய்கறி தோட்டம் அமைக்க இடுபொருள் வழங்கல்**

அருப்புக்கோட்டை, :அருப்புக்கோட்டை கோவிலாங்குளத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் சத்துமிகு காய்கறிகளுக்கான மாடித்தோட்டம் அமைத்தல் தொடர்பான செயல்விளக்க திடல் பயிற்சி மற்றும் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தலைவர் பால்பாண்டி தலைமை வகித்தார். தோட்டம் அமைத்தலின் முக்கியத்துவம், செடி வளர்ப்பதற்கான மண் கலவை, விதைப்பு, மாடித் தோட்டத்தில் பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு, மாடித் தோட்டம் அமைப்பதன் மூலம் விற்பனை மேம்பாடு, மாடித் தோட்டத்தில் வளர்க்கப்படும் காய்கறிகளின் சத்துகள், பயன்பாடு ஆகியன குறித்து விளக்கப்பட்டது. திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி, உதவி பேராசிரியர்கள் ராஜேந்திரன், ராமகிருஷ்ணன், சரவணக்குமார், பண்ணைமேலாளர் கார்த்தி, ஆகியோர் பேசினர். தக்காளி, வெண்டை, கத்தரி, மிளகாய், அவரை, சீனி அவரை, பாகற்காய், புடலங்காய், பீக்கங்காய் மற்றும் தண்டுக்கீரை ஆகிய விதைகள் அதை விதைப்பதற்கு தேவையான பரிந்துரைக்கப்பட்ட அளவுள்ள பாலீதின் பைகள் மற்றும் இடுபொருட்கள் பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது. தொழில் நுட்ப உதவியாளர் கவிதா நன்றி கூறினார்.

# கழுகுமலையில் பலத்த மழை

கழுகுமலை,: கழுகுமலை பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. கழுகுமலை பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கழுகாசலமுர்த்தி கோயில் தெப்பம், கீழகுளம், ஆம்பல்ஊரணி மற்றும் கண்மாய் பெருகி வருகின்றன. மேலும் கழுகுமலையை சுற்றியுள்ள கிராமங்களான வேலாயுதபுரம், பழங்கோட்டை, வள்ளிநாயகபுரம், லட்சுமிபுரம். சங்கரலிங்கபுரம், காலங்கரைப்பட்டி உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கடந்த புரட்டாசி மாதம் தங்கள் விளை நிலங்களில் மக்காச்சோளம், உளுந்து, பாசிபயறு, நெல் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்தனர். விதை விதைத்து கடந்த சில நாட்கள் கழித்து பெய்த சில மழையால் பயிர்கள் முளைக்கத்தொடங்கியது. பின்னர் சரிவர மழை இல்லாததால் பயிர்கள் வாடத்தொடங்கியது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர். இந்நிலையில் கழுகுமலை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மக்காச்சோளம், உளுந்து, பாசிபயறு உள்ளிட்ட பயிர்கள் செழித்து வளர்ந்து வருகிறது. நேற்று காலை முதல் மதியம் 3 மணி வரை வெயில் கொளுத்தியது. தொடர்ந்து 3.30 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் 1 மணி நேரம் பெய்த மழையால் கோவில்பட்டி ரோடு, கறிக்கடை தெரு, திருமாளிகை தெரு, வேதகோயில் தெரு, நாராயணசாமி கோயில் தெரு உள்ளிட்ட தாழ்வான தெருக்களில் தண்ணீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. இரு சக்கர வாகனஓட்டிகள் சிரமப்பட்டு சென்றனர். கனமழையால் வேதகோயில் தெருவில் உள்ள தூய லூர்து மாதா ஆயலத்தை சுற்றிலும் தண்ணீர்

தேங்கியது. இதனால் பக்தர்கள் கோவிலுக்குள் செல்ல முடியாமல் சிரமப்பட்டு சென்று வந்தனர்.

## <u>சிவகங்கை மாவட்ட நெற்பயிர்களில் குலைநோய் தாக்குதல் அதிகரிப்பு</u>

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் ஏற்பட்டுள்ள குலைநோய் தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி கூறியிருப்பதாவது: சிவகங்கை மாவட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள சீதோஷ்ண நிலை காரணமாக மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரில் ஆங்காங்கே குலைநோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இவை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் நோய் தாக்குதலை விவசாயிகள் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். பயிரின் அனைத்து பகுதிகளிலும் இலைகள், தண்டு, கணுப்பகுதி, கழுத்து பகுதி, கதிர் பகுதி பூசணத்தால் தாக்கப்படலாம். இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போல் தோற்றமளிக்கும். இதுவே குலை நோய் ஆகும். கதிர் வெளிவந்தவுடன் பயிர்கள் சாய்ந்து விடும். கதிர் பருவ நிலைக்கு முன்பே கழுத்து பகுதியில் நோய் தாக்கினால் தானியங்கள் உருவாகாது. மேகமூட்டமுள்ள வானம், தொடர் மழை மற்றும் தூரல்கள், அதிக அளவில் பயன்படுத்தப்படும் அம்மோனியம் சல்பேட் போன்ற தழைச்சத்து உரங்கள், காற்றின் ஈரப்பதம் 90 சதவீதத்திற்கு மேல் இருக்கும்போது குலை நோய் தாக்குதல் ஏற்படும். குலைநோய் தாக்குதல் தென்பட்டால் உடனடியாக ஒரு எக்டேருக்கு டிரைசைக்ளோசோல் மருந்து 400 கிராம் அல்லது எடிபன்பாஸ் 500 மி.லி அல்லது மேன்கோசெப் 1 கிலோ வீதம் ஏதாவது ஒரு மருந்தினை உடனடியாக

அடிக்கலாம். நோய் கட்டுப்பாட்டில் இல்லையெனில் மீண்டும் 15 நாள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை மேற்கண்ட மருந்தினை அடிக்க வேண்டும். இந்நோயில் பிபிடி 5204 நெல் அதிகம் பாதிப்படைய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் வயலினை தினமும் கண்காணிக்க வேண்டும். நோய் தாக்குதல் இருந்தால் வட்டார வேளாண் அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 27, 28 தேதிகளில் பலத்த மழைக்கு வாய்ப்பு; இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை

சென்னை, இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் மீண்டும் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி இருக்கிறது. இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 27, 28 தேதிகளில் பலத்த மழை பெய்யும் என்றும் வானிலைஆய்வுமையம்தெரிவித்துள்ளது.

வடகிழக்குபருவமழை

வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. கடந்த 21-ந் தேதி (சனிக்கிழமை) இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியது. அந்த காற்றழுத்த தாழ்வுநிலை மேற்கு நோக்கி நகர்ந்து, குமரி கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் அதற்கு மறுநாள் (22-ந் தேதி) நிலைகொண்டது. பின்னர், அங்கிருந்து நகர்ந்து நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலத்தீவு மற்றும் அதனை ஒட்டியுள்ள லட்சத்தீவு கடல் பகுதியில் நிலைகொண்டிருந்தது. இதன் காரணமாக, தமிழகம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. ஒரு சில இடங்களில் மிக கனமழையும்

பெய்தது.

மீண்டும்புதியகாற்றழுத்ததாழ்வுநிலை

இந்த நிலையில், ஏற்கனவே உருவாகி இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மறைந்து விட்டதாகவும், தற்போது மீண்டும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுநிலை தென்மேற்கு வங்க கடலில் உருவாகி இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களுக்கு நேற்று பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

வலுவடையாது. மாலத்தீவு மற்றும் லட்சத்தீவு கடல் பகுதியில் நேற்று (நேற்று முன்தினம்) நிலைகொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்தது. தற்போது அந்த காற்றழுத்த தாழ்வு நிலை முற்றிலுமாக மறைந்து விட்டது. தற்போது இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடல் பகுதியில் மீண்டும் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருக்கிறது. இந்த தாழ்வுநிலை, காற்றழுத்த தாழ்வுபகுதியாக வலுவடைய வாய்ப்பு இல்லை. இது வடமேற்கு நோக்கி நகர்ந்து அரபிக்கடல் பகுதியை நோக்கி செல்வதற்கான வாய்ப்பு உள்ளது.

அனேக இடங்களில் மழை பெய்யும்

இந்த புதிய காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று), தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். மேலும் 27, 28 ஆகிய தேதிகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில்பலத்தமழைபெய்யும்.

சென்னையை பொறுத்தவரையில், வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

மழைஅளவு

நேற்று (நேற்று முன்தினம்) காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

பாபநாசம் 18 செ.மீ., தாம்பரம் 17 செ.மீ., அண்ணா பல்கலைக்கழகம் 16

செ.மீ., சென்னை மீனம்பாக்கம் 14 செ.மீ., கேளம்பாக்கம், கலவை, காஞ்சீபுரம், பூந்தமல்லி ஆகிய இடங்களில் தலா 13 செ.மீ., மகாபலிபுரம் 12 செ.மீ., கொளப்பாக்கம், ஆவடி, செம்பரம்பாக்கம், செங்கல்பட்டு ஆகிய இடங்களில் தலா 11 செ.மீ., கே.வி.கே. காட்டுப்பாக்கம், தரமணி, காவேரிப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 10 செ.மீ., சென்னை (வடக்கு), சென்னை டி.ஜி.பி. அலுவலகம் 9 செ.மீ., குடியாத்தம், செய்யூர், மேலலாத்தூர், அரக்கோணம், திருவளங்காடு ஆகிய இடங்களில் தலா 7 செ.மீ., மன்னார்குடி, திருத்தணி, உத்திரமேரூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**<u>நெகமம் பகுதியில் மக்காச்சோளம் விளைச்சல் அதிகரிப்பு</u>**



நெகமம்

நெகமம் பகுதியில் மக்காச்சோளம் விளைச்சல் அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.
மக்காச்சோளம்சாகுபடி

நெகமம் மற்றும் அதன்சுற்றுவட்டாரத்தில் விவசாயம் பிரதான தொழிலாக விளங்கி வருகிறது. இந்தநிலையில் ஆண்டிப்பாளையம், சேரிப்பாளையம், மஞ்சம்பாளையம், பெரியகளந்தை, மன்றாம்பாளையம், கப்பிணிபாளையம், குருவேகவுண்டன்பாளையம், சிறுக்களந்தை ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தற்போது மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம் கோழித்தீவனம் தயாரிக்க அதிகளவில் பயன்படுத்துவதால் கோழிப்பண்ணை உரிமையாளர்கள்

விளைநிலங்களுக்கு நேரடையாக சென்று அதனை கொள்முதல் செய்து வருகிறார்கள். இதனால் விவசாயிகள் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம்காட்டிவருகிறார்கள்.

விளைச்சல்அதிகரிப்பு

தற்போது இங்கு பயிரிடப்பட்டு உள்ள மக்காச்சோளம் நன்கு கதிர்பிடித்து விளைச்சல் அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:- நெகமம் பகுதியில் மக்காச்சோளம் விளைவதற்கான நல்ல காலநிலை நிலவுகிறது. மேலும், கோழிப்பண்ணை உரிமையாளர்கள் நேரடியாக விளை நிலங்களுக்கு வந்து கொள்முதல் செய்கிறார்கள். இதனால் எங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. இதன்காரணமாக மக்காச்சோளம் அதிகளவில் பயிரிட்டு உள்ளோம். தற்போது மக்காச்சோள பயிர்கள் நன்கு கதிர்பிடித்து உள்ளது. இதேபோல் விளைச்சல் அதிகரித்து உள்ளதால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி குடகனாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



வேடசந்தூர், வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி குடகனாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் 2 நாளில் 3 அடி தண்ணீர் உயர்ந்துள்ளது. லட்சுமணம்பட்டி தடுப்பணை நிரம்பி வழிகிறது.

அழகாபுரிகுடகனாறுஅணை

திண்டுக்கல் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. எனவே ஆத்தூர் காமராஜர் அணை நிரம்பியது. அங்கிருந்து மறுகால் செல்லும் வெள்ளநீர் குடகனாறு வழியாக

வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி குடகனாறு அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 27 அடி ஆகும். பருவமழைக்கு முன்பு 10.01 அடி தண்ணீர் இருந்தது. வடகிழக்கு பருமழையினால் 22-ந் தேதி காலை வரை அணையில் 12.08 அடி தண்ணீர் இருந்தது. ஆத்தூர் காமராஜர் அணை நிரம்பிய பின்னர் கடந்த 22-ந் தேதி முதல் குடகனாற்றில் தண்ணீர் வரத்தொடங்கியது.

நீர்மட்டம்அதிகரிப்பு

நேற்று மாலை நிலவரப்படி ஆற்றில் வினாடிக்கு 156 கன அடி தண்ணீர் வந்துகொண்டு இருக்கிறது. ஆத்தூர் அணையில் இருந்து நீர்வரத்தால் குடகனாறு அணையில் 15.42 அடி தண்ணீர் உயர்ந்துள் ளது. அதாவது கடந்த 2 நாளில் 3 அடிக்கு மேல் தண்ணீர் உயர்ந்துள்ளது. வேடசந்தூர் அருகே குடகனாற்றுக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள லட்சுமணம்பட்டி தடுப்பணையில் நீர் வீழ்ச்சிபோல வெள்ளநீர் தடுப்பணையை கடந்து செல்கிறது. இதை பார்க்க சுற்றுப்புற கிராம மக்கள் வந்து செல்கிறார்கள். தடுப்பணையில் ஓடும் வெள்ளநீரில் இளைஞர்கள் குளித்து மகிழ்கிறார் கள். ஆனால் வெள்ளநீருடன் திண்டுக்கல் பகுதியில் உள்ள தோல் தொழிற்சாலை கழிவுநீரும் கலந்து வருவதால் இதில் குளிப்பவர்களுக்கு உடல் அரிப்பு ஏற்படுவதாக கூறுகிறார்கள்.

## தோவாளை பூமார்க்கெட்டில் பிச்சி, மல்லிகை விலை ‘கிடு கிடு’ உயர்வு ஒரு கிலோ ரூ.1000–த்திற்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் பிச்சி பூ, மல்லிகை பூ விலை ‘கிடு கிடு’ என்று உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.1000–த்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

பூமார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. பூக்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படுகிறது.

பிச்சிவிலைஉயர்வு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.625–க்கு விற்கப்பட்ட பிச்சி பூ, நேற்று விலை ரூ.375 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1000–த்திற்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ நாளை (இன்று) புதன்கிழமை திருக்கார்த்திகை என்பதால் பிச்சி பூவின் தேவை அதிகமாக இருந்தது. இதனால் வியாபாரிகள் போட்டி போட்டு பிச்சி பூக்களை ஏலம் எடுத்தனர். இதனால் தான் பிச்சி பூவின் விலை உயர்ந்து காணப்பட்டது”என்றார்.

மல்லிகைப்பூ

மல்லிகைப்பூ நேற்று முன்தினம் கிலோ ரூ.700–க்கு விற்கப்பட்டது. நேற்று ரூ.300 உயர்ந்து கிலோ ரூ.1000–த்திற்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும் முல்லை ரூ.700–க்கும், கனகாம்பரம் ரூ.400–க்கும், அரளிப்பூ ரூ.300–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.200–க்கும், பட்டன்ரோஸ் ரூ.150–க்கும், வெள்ளைசிவந்தி ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், சிவந்தி ரூ.100–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், சம்பங்கி ரூ.100–க்கும், கேந்தி ரூ.80–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.80–க்கும், வாடாமல்லி ரூ.50–க்கும், கோழிப்பூ ரூ.50–க்கும், மாம்பழ கேந்தி ரூ.50–க்கும், துளசி ரூ.40–க்கும், பச்சை ரூ.10–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.800–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## மாவட்டம் முழுவதும் தொடர்மழைக்கு 14 ஏரிகள் நிரம்பின

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை பெய்த தொடர்மழைக்கு பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 14 ஏரிகள் நிரம்பி உள்ளன.

14ஏரிகள்நிரம்பின

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக இயல்பான அளவை காட்டிலும் குறைந்த அளவே மழை பெய்து வருகிறது. இந்த ஆண்டும் ஒரு சில பகுதிகளில் அதிக அளவு மழை பெய்தாலும், பெரும்பாலான பகுதிகளில் குறைவான அளவே மழை பதிவாகி உள்ளது. கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளன. இதனால் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 79 ஏரிகளில் ஏமப்பள்ளி ஏரி, மாமுண்டி அக்ரஹாரம் , மின்னக்கல் , பாலமேடு சின்ன ஏரி, சேமூர் பெரியஏரி, தேவனாம்பாளையம், இலுப்புலி, பருத்திப்பள்ளி, துத்திக்குளம், பொம்மசமுத்திரம், பெரியகுளம், செருக்கலை, புதுக்குளம், மல்லசமுத்திரம் சின்ன ஏரி என மொத்தம் 14 ஏரிகள் நிரம்பி உள்ளன. பாதிஅளவு கூட நிரம்பவில்லை. அக்கரைப்பட்டி மற்றும் சரப்பள்ளி ஏரிகள் 75 சதவீதமும், வேட்டாம்பாடி, பாப்பன்குளம், மாணிக்கம்பாளையம், காளப்பநாயக்கன்பட்டி புதுக்குளம், வரகூர் ஆகிய 5 ஏரிகளும் 50 சதவீதமும் நிரம்பி உள்ளன. மீதமுள்ள 58 ஏரிகள் இன்னும் பாதிஅளவு கூட நிரம்பவில்லை. குறிப்பாக மாவட்டத்திலேயே பெரிய ஏரியாக கருதப்படும் தூசூர் உள்ளிட்ட ஏரிகள் இன்னும் நிரம்பவில்லை. அவற்றில் தற்போது பெய்து வரும் மழைக்கு குட்டைபோல் மட்டுமே தண்ணீர் தேங்கி உள்ளது. இது அந்த ஏரி பாசன விவசாயிகளை கவலை அடைய செய்து உள்ளது. 100 ஏக்கர் மற்றும் அதற்கு மேல் பாசன பரப்பு கொண்ட ஏரிகளை பொதுப்பணித்துறை நிர்வகித்து வருகிறது. அதனை விட சிறிய ஏரிகள் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் இருந்து

வருகின்றன. இவற்றில் ஏராளமான ஏரிகள் நிரம்பி இருப்பதாக கூறப்படுகிறது.

மழைஅளவு

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினமும் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக நாமக்கல்லில் 10 மி.மீட்டர் மழைபதிவானது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழைஅளவு மி.மீட்டரில் வருமாறு:- நாமக்கல் -10, மோகனூர்-4, திருச்செங்கோடு-3, பரமத்திவேலூர்-3, மங்களபுரம்-2.2, ராசிபுரம்-2.1, புதுச்சத்திரம்-2, குமாரபாளையம்-1.2, சேந்தமங்கலம்-1. மாவட்டத்தின் மொத்த மழை அளவு 28.5 மி.மீட்டர் ஆகும்.

**<u>பெரம்பலூர் மாவட்டம் குன்னம் பகுதியில் 7 ஏரிகள் நிரம்பின தொடர் மழையால் சுவர்கள் இடிந்து விழுந்தன</u>**



பெரம்பலூர் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் குன்னம் பகுதியில் உள்ள 7 ஏரிகள் நிரம்பின. சுவர்கள் இடிந்து விழுந்தன.

காட்டாற்றுவெள்ளம்

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் வானிலையில் மாற்றம் ஏற்பட்டு காலையில் வெயில் அடித்தது. தொடர்ந்து இதமான தட்பவெப்பநிலை நிலவியது. பெரம்பலூரில் தொடர் மழையால் வெள்ளாறு மற்றும் சின்னாறுகளில் காட்டாற்றுவெள்ளம்கலக்கிறது.

7ஏரிகள்நிரம்பின

இதனால் குன்னம் அருகே உள்ள வடக்கலூர், வடக்களூர் அகரம், வயலூர், கீழப்பெரம்பலூர், ஆய்குடி, கைப்பெரம்பலூர் மற்றும் ஒகளூர் ஏரிகள் நிரம்பின. குன்னம் பகுதிகளில் உள்ள மொத்தம் 19 ஏரிகளில் 7 ஏரிகள் 4 ஆண்டுகளுக்கு பிறகு முழுமையாக நிரம்பி உள்ளன. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் அகரம்சீகூர், கீரனூர், பென்னகோணம், பெருமத்தூர், எழுமூர், சின்னாறு, பெரியம்மாபாளையம், ஆண்டி குரும்பலூர், கிளியூர்,அத்தியர், கீழப்புலியூர் ஆகிய ஏரிகள் நிரம்பி வருகின்றன. இந்த ஏரிகள் இன்னும் ஓரிருதினங்களில் முழு கொள்ளளவை எட்ட வாய்ப்பு உள்ளது.

சுவர்இடிந்துவிழுந்தது

மேலும் தொடர் மழையினால் ஆடுதுறை கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அபராதரட்சகர் கோவிலின் பின் சுற்றுச்சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. மேலும் அப்பகுதியில் உள்ள 2 வீடுகளில் ஒரு பக்க சுவர் இடிந்து விழுந்தது. வயலூர் மற்றும் பேரளி கிராமத்திலும் 2 வீடுகளில் ஒரு பக்க சுவர்கள் இடிந்து விழுந்தன.

## <u>தாராபுரம் அருகே உள்ள நல்லதங்காள் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>



தாராபுரம் அருகே உள்ள நல்லதங்காள் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>நல்லதங்காள்அணை</u>

தாராபுரம் அருகே உள்ள நல்லதங்காள் ஓடை, அமராவதி ஆற்றின் உபநதிகளில் ஒன்றாகும். இந்த ஓடையானது திண்டுக்கல் மாவட்டம் பழனி மலையின் வடக்கு பகுதியில் இருந்து தொடங்குகிறது. பழனி

தாலுகாவில் 32 கிலோ மீட்டரும், தாராபுரம் தாலுகாவில் 14 கிலோ மீட்டரும் பயணித்து கரையூரை அடுத்துள்ள பகுதியில் அமராவதி ஆற்றில் கலக்கிறது. இந்த ஓடையின் குறுக்கே பொன்னிவாடி கிராமத்தில் அணை கட்டப்பட்டு தண்ணீர் தேக்கப்படுகிறது. இந்த அணையின் மொத்த உயரம் 30 அடி ஆகும். இதன் மூலம் தாராபுரம் மற்றும் மூலனூர் பகுதிகளில் நல்லாம்பாளையம், ஆலாம்பாளையம், பெரமியம், தூரம்பாடி, மூலனூர் உள்ளிட்ட கிராமங்களில் 4 ஆயிரத்து 744 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. சில மாதங்களுக்கு முன்பு அணைக்கு நீர்வரத்து குறைந்து இருந்ததால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட முடியாத நிலை ஏற்பட்டது. வடகிழக்கு பருவமழை பெய்தும், அணைக்கு தண்ணீர் வரத்து இல்லை. இதனால் அப்பகுதி விவசாயிகள் கவலை அடைந்தனர்.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து திண்டுக்கல் மாவட்டத்தில் குறிப்பாக பழனி பகுதியில் அதிக அளவு மழை பெய்தது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நல்லதங்காள் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்றைய நிலவரப்படி 30 அடி கொள்ளளவு உள்ள அணையில் நீர்மட்டம் உயர்ந்து 20 அடியாக உள்ளது. அணையின் நீர்பிடிப்பு பகுதியில் உள்ள ஏராளமான குளங்கள் நிரம்பி உள்ளதால், தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் நல்லதங்காள் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில் ஓரிரு நாட்களில் அணை நிரம்புவதற்கும் வாய்ப்பு இருப்பதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.